**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 172 of 2026 |
| Prosecution Witness | : | PW2 |

16.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்திய விநாயகம் | Calling | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father Name | : | இளம்பருதி | Religion | : | 53 |
| Village | : | தொட்டியம் | Age | : | |
| Taluk | : | தொட்டியம் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தேவராஜ் என்பவர் தற்போது ஓய்வு பெற்று விட்டதால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நீதிமன்ற அனுமதி பெற்று ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறன். கடந்த 25.01.2021 அன்று உப்பிலியபுர காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது உதவி ஆய்வாளர் தேவராஜ் சோபனபுரத்தை சேர்ந்த பெரியண்ணன் மகன் கண்ணன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.43/2021 சட்டப்பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(2), 114 இ.த.ச. கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அன்றைய தினமே மதியம் 15.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் பச்சைமுத்து, துரைராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அ.சா.ஆ.3 மற்றும் 4** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் கண்ணன், நடேசன், செல்வம், பச்சை முத்து, துரைராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது

Digitally signed by SURESHKUMAR R
SURESHKUMAR R
Date: 2026.07.16 09:17:57 +0530

வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகள் விசாரணையில்இருந்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும் இவ்வழக்கில் யாரும் யாரையும் திட்டவோ, அடிக்கவோ ஜாதி கலவரத்தை ஏற்படுத்தும் வகையிலோ எதுவும் செய்யவில்லை என்று தெரிந்ததால் இவ்வழககில் இருந்து நடராஜ், இளங்கோவன், செல்வராஜ், விவேக், சீனிவாசன், ராஜசேகர், ரெங்கநாதன், ரமேஷ், வெங்கடேசன் ஆகியோர்களை நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரிகள் நீக்கர் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 294(b), 323, 324, 506(2), 114 இ.த.ச. வில் இருந்து 294(b) 324, 506(2) இ.த.ச வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கில் காயம் பட்ட கண்ணன் என்பவருக்கு சிகிச்சை அளித்த துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சோலை மேகலா என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் பெற்றுள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. இத்துடன் அவர் தனது விசாரணை முடித்து கடந்த 08.02.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.16 09:18:07 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.